உ

ஸ்ரீரஸ்து

ஜிஸ்டாசாரமென்னும்

# சத்புருஷக்கிரமம்

இஃது

முமுச்சுக்கள் முக்தாளாகும் பொருட்டு

ஸ்ரீ காமாட்சி அருளினால்

வேதாந்த பஞ்சனத சாஸ்திரியவாள் மாணாக்கர்

த. க, ஸ்ரீ சி. மாரியப்பபிள்ளையவாள்

செய்தருளிய[illegible]த

சிஷ்யனான


ரெ. பெரியசாமி மூப்பனாரால்

தஞ்சாவூர்

ஸ்ரீ ராமாநுஜவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1913



# முகவுரை

ஸ்ரீ பஞ்சனதீச்சுரனுடைய குருகடாட்சத்தால் லப்தமான விவேகக்ஞானம் என்புத்தியில் பிரதிபலித்து வாக்குக்கெட்டினமட்டில் ஜிஸ்டா சாரமென்னும் சத்புருஷக்கிரமம் செய்வதாயிற்று.

## பிரம்மபுரியட்டகம்

அதாவது பிரமம் சித்து சீவன் அகங்காரம் மனம் புத்தி யிந்திரியம் தேகம் ஆகயெட்டும் கூடியது துரியபுரியட்டகமென்று கெர்ப்ப உற்பத்தி உபநிஷத்தில் சொல்லிவருகின்றது. இது எப்போதும் சாஸ்வதமுள்ளது விதேகத்தில்லயம் அத்தை யெப்படி அனுபவிக்கிறதென்றால், லீலையாகவும் விளையாட்டாகவும் புருஷனுக்கு தள்ளுபடியாகவும் அனுபவிக்கவேண்டியது

அதின் தாரதம்மியம் எப்படியிருக்குமெ ன்றால் சுசாதீக விசாதீக சுவகத பேதமாகயிரு க்கும் சுசாதீகமென்றால் திஷ்டாந்திரம் மரத்துக் கும் கல்லுக்கும் யெப்படி சம்மந்தமில்லேயோ அப் படி தாஷ்டாந்திரம் தேகம் விஷயம் தள்ளுபடி. விசாதீகமென்றால் மரத்துக்கு மரம் சேரவில்லேயோ அப்படி சீவனுக்கு கருத்து நவத்துவம் தள்ளுபடி. சுவகதபேதம் மரம் யெலே பூ பிஞ்சி காய் கனி முதலானதும் போல் யிது தள்ளுபடியல்ல அது சுபாவம்

யெப்படி தனக்குப் பிரயோசன மில்லேயோ அப்படி சீவாளுக்கேயொழிய வேரில்லே மரமி ருந்தால் காய்கனியிருப்பதுபோல தாஷ்டாந்தி ரம் ஜெகமிருக்க சீவகாருண்ணியம் சத்துவகுணநிஷ் டனுயிருத்தல் வேண்டும். இதற்கு அனுஷ்டானம் ரகசியமாக அனுபவித்தல் வேண்டும். அதுயெதுவெ ன்றால் மனதுக்குள்ளே சங்கல்பத்தை தள்ளிதான் சுத்தநாகி நிதித்தியாசனம் செய்யவேண்டும் அப்படி செய்யவேண்டுமென்றால் சாதனங்கள் வேண்டும்.

அதாவது கீளுள்ள பலவர்ச்சிதம்புண்ணி யீஸ்

வார்ப்பனம் செய்த பூசாடலத்திஞல் சாதனங்கள் கிடைக்கும். முதல் சாதனம் நித்தியாநித்தியவஸ்து விவேகம் யேனென்ருல் மாயையைக்கெடுக்க முயர்ச்சித்தால் முதல்சாதனம் கிட்டும். இரண்டாம் சாதனம் யேனென்ருல் யிகமுத்திரார்த்த பல போகவிராகம் அவித்தையைக் கெடுக்க முயர்ச்சித்தால் இரண்டாம் சாதனம் கிட்டும். மூன்ரும் சாதனம் ஏனென்ருல் சமாதி சட்கசம்பத்தி காமாதிகளைக் கெடுக்க முயர்ச்சித்தால் மூன்ராம் சாதனம் கிட்டும். நான்காம் சாதனம் யேனென்ருல் புருஷனைப்பிரிக்க

அதாவது மூமுட்சத்துவமென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

அவனை எப்படி அடைகிறதென்ருல் முதல்பூமி தெரிசனம். அவனை மலத்தைநீக்கி சுததப்படுத்தவேணுமென்ருல் சிரவண மனன நிதித்தியாசனம் சுத்தமானவனை யினிப்பிரிவியில்லாமல் செய்யவேண்டுமென்ருல் நிருவிகல்ப்பம் நிர்ச்சங்கல்ப்பம் நிருவிருத்திகம் நிர்வாசஞ்சமாதியிஞல் அடைவிக்கவும்.

சன்னியாசிக்கும் தாய் தந்தை பாரிபுத்திராளு

ண் டேஎப்படியென்றால் தாயாகிய மாயையைத் தள்ளி

தந்தையாகிய கியாநத்தைக் கைக்கொண்டு

பாரியாகிய தனக்கும் தலைவனுக்கும் அயிக்கியானு சந்தி பண்ணி

பிரபோதன் யென்குர பிரத்திமெய காத்பாவான பிள்ளையைப் பெத்தால்த்தான் சன்னியாசி

பிம்பசீவன் தூரியன் பிரதிபிம்பசீவன் • கர்த்தா சாயை சிதாபாசன்

சீவனில் மூன்று அதாவது.—

கர்த்தாகளும்பு சதாதுடைந்துக்கொண்டு பிம்பமானால் தனக்கும் தலைவனுக்கும் அயிக்கியம்

சுசாதீகம் பிர்ம்ம புச்சத்தை விசாதீகம் தேகத்தை நீக்கி சுவகதபேதம் சித்உல்லாசத்தில் சேர்க்கவும்.

அசத்தாவரணம் யீஸ்வரனையும் அபானுவாணம் சீவனையும் மறைக்கும்

சாதன சதுஷ்டயத்தினுல் மோக்ஷயிச்சையும் அசுத்திபோனுல் தெரிசனமும் அக்கியானம் போனுல் சிரவணமும், சந்தேகம்போனுல் மனனமும்

அதினுல் கிரியானுவித்தசமாதி

யீஸ்வர உபாதி

பிரபஞ்சம் தோன்றியும் யீஸ்பரன் முதலான ரூபநாசமாகும் நிதித்தியாசனத்தினுல் விபரீதமும் அதினுல் சப்தானுவித்தம் சீவனுக்கு பாக்கி சமாதியில் யென்ன சப்தம் உண்டாகியும் சமாதி கலேயாமலிருந்தால் நிருவிகல்ப்ப சமாதி கிடைக்கும்

சீவன்முத்தி அதனுல் நிர்ச்சங்கல்ப்ப சமாதி விதேகம் அதனுல் நிருவிருத்திக சமாதி அதனுல் நிர்வாசனுசமாதி யிதுதான் துரியமென்றும் துரியாதீதமென்றும் கைவல்லிய உபநிஷத்தில் சாதுக்கள் சொல்லுகிறதும் தவிர பகவத் கீதையில் பகவான் அருச்சுனருக்கு சொல்லுகிறதும் தவிர வசிஷ்டர் வாசிஷ்டத்தில் ஸ்ரீ ராமபிரானுக்கு இந்த ஞானபூமியேழையும் சவிஸ்தாரமாக சொல்லுகிறுர்

இதற்குப்பளக்கம் வெகுகாலம் இடைவிடாமல் ஆதாவுடனே என்றதற்கு விபரம்.

பிராணனுக்கு, ஸத்தூலம், வாய்வு, சூட்சு மம், அக்கினி, காரணம், சங்கல்பம், இந்த மூன்றுங்கூடி புருவமய்யத்தில் வெகுகாலம் செய் தால் அசுத்திபோம் அதற்குமேல் சிரவணம்'

தொம்பத தாப்பதசோதனைசெய்து மஹாவா க்கியார்த்தம் கைக்கிவந்தால் அக்கியானம்போம். மேல்மனனம் தன்னைத்தவிர அதுவில்லை, அதைத் தவிரதானில்லை யென்று திடநிக்ஷயம்வந்தால் சந் தேகம் போம்.

மேல்பிரகாசத்தை தவிர பிரபஞ்சமில்லை பிர பஞ்சமெல்லாம் பிரகாசம்தான் யென்று சிந்தனை வந் தால் விபரீதம்போம்.

அதுவரையில் சீவன் முத்தனுக்கு பாபக்ஷம் இதற்குமேல் நிருவிகல்ப்பம் கிட்டும்.

அதற்குப்பளக்கம் நிவாதஸ்தலத்திலிருக்கவே ண்டும் அதாவது ஊருக்குப் புரம்பில்இடம் யேர் ப்படுத்தி தான் வசிக்க அபரோக்ஷமாம்,

அதற்குமேல் சப்தானுவித்தம் திருசியானுவித்தங்கள் மாரினது இந்தப்பளக்கத்தால் மனனம் திடப்பட்டது.

திருசியானுவித்தம் நிதித்தியாசனம் திடப்பட்டது.

அதற்குமேல் சப்தானுவித்தம் நிருவிகல்ப்ப சமாதி கிடைத்தது.

அதற்குமேல் சகசசமாதி. அதற்குப்பளக்கம் திருஷ்டா கூடஸ்தனும் தெரிசனம்அரிவும் திருஷ்டி விஷயமும்

தெரிசனத்திலிருந்து திருஷ்டியை நீக்கி திருக்கு ஆகிறதுதான் புருஷப்பிரயத்தினம்,பிராணனோடெ பனசுயிழுக்கிறதாவென்று அரிவாகாரமாய் பார்க்கிறதுதான் மீந்துநின்ற இடம்

இதுதான் சித்தநிரோதனம்,

யேகாக்கிரமனசு இதற்குத்தான் யேகசந்தக்கிாகியென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

அதற்குமேல்ப்பளக்கம் யென்னவென்றால் ஊர்த்துவதிருஷ்டி, பௌர்ணமை திருஷ்டி, மத்திம திருஷ்டி, அமாவாசை திருஷ்டி, இதோடுகூட சசசமாய் பார்க்க தெரிசனம் இதில் சங்கல்ப்பம் கூடும்போது உத்தேசமோ அதில்மேல்ச்சொன்ன ஊர்த்துவதிருஷ்டியில் நிர்க்கக்கூடும்.

தியானத்தில் பூதகாலம் கூடாது. பவுஷிய காலங்கூடாது, முன்பின் வரக்கூடாது, வந்தால்

பவத்துக்கு அருகனுக்கும், பலவர்ச்சிதனுக்கும், அதாவது தியானம் திடப்பட்டால்

சிவப்பிரமை தன்னைப்போல தோன்றி பின்பு பரதேவதை தோன்றினால் ஜீவன்முக்தி இது என்னமோவென்று இருக்கக்கூடாது இது சொர்ப்பனத்தில் காணுகிறதல்ல.

சாக்கிரத்தில் தியானத்தில் பிரத்யக்ஷமாய் தோணவேண்டும் இது பரம்பராசாதனம்

பெற்றசிஷ்யனுக்கு சாதுக்கள் சொல்லப்பட்டது.

அதிரகசியம் இத்தை பெரியவாள் முன்னிலை யில் சாஸ்திரமுலியமாய் அரியவேண்டியது.

ஏனென்றால் முக்கியாம்சமானபடியால் சொல்ல ப்பட்டது

இந்த தீர்மானத்தையடைய

நாலுவித பிரமையுண்டு அதாவது கருத்து ருவத்துவபிரமை, சங்கல்ப்பப்பிரமை, காரணப்பிர மை, சகப்பிரமை இந்தநாலுக்கும் திருஷ்டாந்தம் சென்ன

கருத்துருவத்துவபிரமை—படிகத்தினால்ப்போம்
சங்கல்ப்பப்பிரமை—வாயுவினால்ப்போம்
காரணப்பிரமை—ஆகாசத்தினால்ப்போம்
சகப்பிரமை—ரச்சுவினாலப்போம்

இந்த விதமாகப்போக்கினால் சத்துக்கள் ஜீவன் முக்தியென்று சொல்லுவார்கள்.

ஆகையால் மாயாவாதிக்கி யேகபாதம் ஜீவன் முக்திக்கி நாலுபாதம் விதேகமுக்திக்கி பதிநாறுபா தம்.

விதேகமுக்திக்கி பதினாறுபாதம்
எப்படி என்றால்

அகார உகார மகார அர்த்தமாத்திரை நாலு, நாதம் விந்து கலை கலாதீதம் நாலு,

சாந்தி அதீதம் உன்மணி மனோன்மணி நாலு, பரா பஸ்யந்தி மத்திமை வைகரீ நாலு

இந்த மாத்திரையானது பிரிந்த இடத்தில் விதேகத்தில் சீவனுக்கு 64 மாத்திரை, ஜீவன் முக்தனுக்கு 64–மாத்திரை, யீஸ்வரனுக்கு 64–மாத்திரை, பிரகிருதிபுருஷனுக்கு 64–மாத்திரை, ஆகமாத்திரை 256. ஆகையால் இந்த நாலு பேருக்கும் அவஸ்தை சொல்லப்பட்டது.

என்னவென்றால்

ஜீவன் முக்தனுக்கு ஓதா அனுக்கியாதா அனுக்கேயாசம் அவிச்சின்னன் நாலு சீவனுக்கு விஸ்வன் தைசதன் பிராங்கியன் துரியன் நாலு யீஸ்வரனுக்கு விராட்டு யிரணியகருப்பன் அந்தரியாமி கூடஸ்தன் நாலு பிரகிருதிபுருஷனுக்கு அவ்வியத்தம் மகத்தத்துவம் அகங்காரதத்துவம் பிரகிருதி நாலு.

இப்படி க்ஷணமாத்திராசேஷம் 256 பிராண வாயுக்களினுடைய தாரதம்மியம் யென்ன? பிராணன் மேல் முகம்நோக்குகிறவன் அபானன் கீழ்முகம் நோக்குகிறவன் உதானன் கண்டம்வரையில் நின்று சுத்தமாக்குகிறவன் வியானன் மலசலத்தை பிரிக்கிறவன் சமானன் சர்வாந்தரியாமியைப்போல் பாத கேசம் வரையில் வியாபகம் இப்படியென்று வாயுக்களின் தாரதம்மியம் சொல்லப்பட்டது

தேகவியோக சமயத்தில்

உதானன் போகிறவன் அது மனசு அத்தை அனுஷ்டிக்கிறது எப்படியென்றால் தேகம் நவச்சக்கிரம் அது பரதேவதை ரூபம்

அதுயெப்படி

மாதா சர்மம் ரெத்தம் மச்சை, பிதா யெலும்பு நரம்பு விந்து மயிர் இதுதான் மாதா பிதாக்கள்

கீழே மூலாதாரத்துக்கு சக்கரம் விந்து இந்த விதமாக தேகசக்கிரத்தையறிந்து மேல்நடத்தவேண்டியதென்னவென்றால்

சாக்ஷாது

ஸ்ரீ ராமச்சந்திரபிரபு ராமகீதை ஸ்ரீ ஆஞ்சநே யருக்குச் சொல்லி, யே ஆஞ்சநேயா ஆத்மரசம் யெப்படி விளங்குகிறதென்றார் சுவாமி தேக புத்தி வந்தால் தாசன். நானென்று புத்திவந்தால் அம்சமாகவும், ஆத்மபுத்திவந்தால் நீபயென்றும், புரியட்டது யே ஸ்ரீ ராமாவென்றார் ஆஞ்சநேயர்

அப்படி கர்த்தாவென்ற அகங்காரி இந்திரிய மென்னும் பசுவை விஷயமென்னும் புல்லில் மேய்க்கிறார் எசமான் திருப்திவானே யொழியவேரில்லை, சர்வசம்பந்தமும் அகங்காரிக்கேத்தான்

பிரபுவிக்குயிருந்தபடி அரிகிறது ஆகையால் ஆதாரமென்றால் அந்தக்கரணம் ஆதேயமென்றால் சிதாபாசன்

இந்த இரண்டுக்குமேல் பிரபுயிருக்கிறார் அவர் தான் அகங்காரி அவன்தான் நிமித்தம் அவனைக் கொண்டுதான் கீழ்சுகம் அனுபவிக்கவேண்டும்.

மேலே ஆத்ம சுகங்கிட்டும் அந்தக்கரணம் சிதாபாசன் விருத்தி யிந்த மூன்றும் அந்தக்கரண

த்தை தள்ளிப்பார்த்தால் சிதாபாசனுக்கு அக்கி யானமில்லை

அந்தக்கரணத்தோடு கூடி விவகரித்தால் சிதா பாசனுக்கு அக்கியானம்.

அது எப்படி கூடாமல் பிரிந்து யிருக்கிறதென் றால்

சூரியன் முன்னே விளக்கு இருந்தும் அதின் வெளிச்சமொழிய அக்கினியும் யெண்ணை யும் திரிமூலியமாய் சாப்பிடுகிறதேயொழிய வேறில்லை

அப்படிப்போல தாஷ்டாந்திரம் ஜீவன் முக் தன் பிரதிபிம்ப சிதாபாசன் அந்தக்கரணமுமிருந் தும் தான் காரணஸ்தனாய் கீழ்காரியம் செய்யி னும் சேதனங் குடுத்தும் உல்லாசமாகவே இருக்கி றான் இது சுவகதபேதம்.

சௌசம் ஆந்தரம் பாகியமென்று இருவிதம் அதில் ஆந்தரமாவது மேலுள்ள பிரக்கினை கூடஸ்த விருத்தி சுப்தி ஜீவவிருத்தி கூடஸ்தவிருத்தி பிரா ஞ்ஞனிடத்திலும் சுப்திவிருத்தி தைசதனிடதிலும்

அகங்காரவிருத்தி விசுவநிடத்திலும் அறிந்துகொ
ள்ளவும்

அகங்காரியென்றால் சிதாபாசன்

அகங்காரனென்றால் துரியநிடத்திலும் அர்த்தம்செய்து கொள்ளல்வேண்டும்.

சிங்காசுவென்றால் தனக்கும் தலைவனுக்கும் ஏரத்தகுந்தவன்

சாந்தராயண விரதமென்றால் தேகசோக்ஷணம் கிரிச்சராயண விரதமென்றால் திரவியசோக்ஷணம் இதுகளெல்லாம் பூர்வாங்கம்

சித்தாந்தமெதுவென்றால் தேகத்துக்கு சாப்பாடு வசிக்கநிழல் குளிருக்கு வஸ்திரம் யிதுதான் கூடும் யிது தேககாரியமென்று அறிக மனதுக்கு சொல்லப்பட்டது யென்னவென்றால் மனசுக்கு மனனம் பீசாக்ஷரம் அதுயெதுவென்றால் ஓம்! ரீம்! கிரீம்! யிதுகளுக்கு மூக்கோண சக்கிரத்துமேல் வாக்குபீஜம் மாயாபீஜம் காமராஜபீஜம் யென்று மூவிதமாகும் இதற்கு மூக்கியார்த்தமாவதென்னவென்றால்

மேல் சொன்னது உத்தமபிராமணருக்கு

கீழுள்ள மற்றய வர்ணத்தாருக்கு மேலுள்ள முக்கியமே சிவா ராமா கிருஷ்ணுவென்றால் அதே யிதுவென்று சத்துக்கள் சொல்லுவார்கள் இந்த இரண்டு அக்ஷரம்தான் பீஜாக்ஷரம் விளங்கவேண்டும் அது பராவாக்கில் இருக்கவேண்டும் மனசுக்கு தியானமாவது தச்சொரூபம் அனுசந்தானமாவது தத னுசந்தானம் அதாவது பிரத்தியேகாத்ம தெரிசனத்தில் தியானரூபமான நாயம் விளங்கவேண்டும் விளங்கியும் தத்சொரூபத்தைவிணு வேருயிதரம் விளங்கக்கூடாது அப்படி யிதரம் விளங்காமலிருந்து அந்தவிருத்திக்கி பளக்கம் யெப்படியென்றால்

அகங்காரியாகயிருந்தாலும் சரி
அகர்த்தாவாகயிருந்தாலும் சரி
நீயேயென்று யிருந்தாலும் சரி
சர்வமும் தானென்று இருந்தாலும் சரி
எல்லாம் தள்ளியாவது யிருந்தாலும் சரி
இரண்டுமில்லாமல் நீயாக இருந்தாலும் சரி,

இப்படி எந்த விதமாவது அனுஷ்டித்தால் வாசனுவசம் போமென்றார் கசனுக்கு

ஆகையால் இச்சாப்பிராலப்தம் அநிச்சாப் பிராலப்தம் பாயிச்சாப்பிராலப்தம்மென்று மூன்று

அதாவது யிச்சாப்பிராலப்தமென்றால் அதி னுடைய அர்த்தம் குடும்பத்தாரை வசப்படுத்தவும்

அனிச்சாப்பிராலப்தமென்றால் தேகத்தை வசப் படுத்தவும் பாயிச்சாப்பிராலப்தமென்றால் காலக்ஷே பத்தை வசப்படுத்தவும் இந்த விதமாக அர்த்தத்தை யூகித்து அனுபவிக்கவும்

குண்டலியின் அஷ்டப்பிரகிருதிதான் புரீய ட்டக சரீரம்

அதாவது மனம் புத்தி அகங்காரம் ஜீவன் சித்து பரை மாயை அவித்தை ஆக எட்டு இது குண்டலி போகும்போதுதான் போகும்.

ஆதலால் இர்தயம் நாலு அதாவது சீவயிர்

தயம் தேகயிர்தயம், மனயிர்தயம், கூடஸ்தயிர் தயம் ஆக நாலு அதாவது சீவனுக்குயிர்தயம் குண்டலி தேகத்துக்குயிர்தயம் மார்பு மனசுக்கு யிர்தயம் சட்சு கூடஸ்தனுக்கு யிர்தயம் பிரம்ம ரந்திரம்.

ஆகையால் யிர்தயம் நாலு சொல்லப்பட்டது

இதற்கு வாக்கு நாலு சொல்லப்பட்டது

அதாவது பரா பஸ்யந்தி மத்திமை வைகரி

இதற்கு ஸ்தானம்

கண்டத்தில் மத்திமை வைகரி சப்தத்தோடு பேசுகிறது பஸ்யந்தி சர்வவியாபகம் பரா மூலத்தில் நின்று சப்தாகாரமாக நிற்கும் ஆதலால் ஜீவன் முக்தன் சமாதி அனுபவமாகி பிரத்தியேகாத்ம கநீபாவமடைந்து சாக்கிரத்தில் சொப்பனத்தில் எப்படி கண்டதெல்லாம் பொய்யென்று தீர்மானமோ அப்படி சாக்கிரத்தில் விளங்குகிற தெரிசன திரிசியத்தில் பொய்யென்று பார்க்க யென்னதடை

அப்படிப்பார்த்தாராம் உத்தாலக மகாமுனிவர். உத்தானதிசையென்றால் தேகவியோகத்தில் அடையும் திசை.

ஆகையால் தர்ம ராஜாக்கள் நாலுபேரு, அதாவது யெமன், தர்ம்மன், காலன், மிர்த்து சிதாபாசன் வேலையென்றால் யெது தேகம் அகங்காரி மனசு, இந்திரியம், பஞ்சப்பிராணன் அதிஷ்டானம் இந்த ஐந்தும் கொண்டுதான் வேலைசெய்கிறான் அனுபவம்யென்னவென்றால் யீஸ்வா காரிய சிதாபாச நிருக்க தனக்குவொரு குத்தமுமில்லை.

யெதிரேகம்—யீஸ்வர சுழுப்தியிலும் தனக்கு பந்தம் போகவில்லை, ஆனதால் மயித்திரியாதி குணம் ஆந்தரங்கத்தில் விளங்க வேண்டும்

எப்படி மயித்திரியென்றால் சிநேகிதம் அதாவது சிநேகிதனாகிய அந்தக்கரணத்துக்கும் தனக்கும் பேதமில்லாமல் மித்திரநாகவொத்தல்

கருணையென்றால் வர்ணாச்சிரமத்தில் கிடைத்ததைக்கொண்டு போரும் யென்று சமமடைதல்

முதிதையென்றால் யித்தனைநாள் சென்றது நம்முடைய செய்கையைப்போல யிருக்கிறதென்று சந்தோஷமடைதல்

உபேக்ஷையென்றால் அதுவும்விட்டு ததாகாரமாயிருத்தல் இந்தவிதமாக அப்பியாசிகளறியவும்,

உலகார்த்தம் என்னவென்றால் கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலரென்று சில சாதுக்கள் சிரவணத்தை தூஷிப்பார்கள் அதாவது அர்த்தம் தெரியாமல் மயங்குகிறார்கள் வித்வான்கள்

அதற்குஅர்த்தம் கண்டதுயென்றால் சட்சு அது விண்டிடாது விண்டவர் கண்டிலரென்றது விண்டது வாக்கு அது காணாதது இது சாமான்னிய அர்த்தம்

சொல்லி அவர்களை மோகத்தில் நின்று வெளிப்படுத்தவும் ஆகையால் வாக்குமனாதிதமென்றதை வருவித்திருக்கிறதென்று செம்மையாய் போதிக்கவும்.

சொரூபஞானமென்றும் விருத்திஞானமென்றும் இரண்டு அதனுடைய அர்த்தம் யென்னவென்றால்

விருத்திஞானமென்றால் ஜெகத்தை பரிபாலனம் பண்ணும்போது ஒருபாதம்.

சொருபஞானமென்றால் தன்னை தெரிசனம் பண்ணினது ஒருபாதம்.

ஆகையால் சர்வசாஸ்திரத்திலும் தாயுமான சுவாமிகளும் பட்டணத்துசுவாமிகளும் கைவல்லியக்காரர்களும் சொல்லியிருக்கிறார்கள்

இரண்டுதான்யென்று உப்நிஷத்து தர்மம்
பகவத்கீதா அர்த்தம்

சன்னியாசி அனுபவிக்கவேண்டியது யின்னது கிரகஸ்த்தன் அனுபவிக்கவேண்டியது யின்னதுயென்று ஆறுவிதமாக சொல்லியிருக்கிறார் அது யெது வென்றால் அசங்கம் பிர்ம்மார்ப்பனம் ஈஸ்வரார்ப்பனம் சன்னியாசம் சம்ஸித்க்ஞானம் யோகம், இந்த ஆரில் சன்னியாசி மூன்று அனுபவிக்கிறது

கிரகஸ்தன் மூன்று அநுபவிக்கிறது

அதுயெப்படி

சன்னியாசி

பிர்ம்மார்ப்பனம் சம்வித்க்ஞானம் யோகம் இந்த மூன்றும் அவாள் அநுபவிக்கவேண்டியது.

கிரகஸ்தன் அசங்கம் சன்னியாசம், யீஸ்வரார்ப்பனம் இந்த மூன்றும் இவாள் அநுபவிக்க வேண்டியது,

ஜீவன் முக்தன் அநுபவந்தான் சாக்கிரத்தை விட்டு சொர்ப்பனம் அடையும்போது தன்னித்திரையை சுழுப்தியில் பார்க்கிறதுதான் சுபாவம் யெத்தைப் பார்த்தோ அத்தை அடையப்போகிறதுதான் ஜீவன்முக்தி

ஜீவன் முக்தி லெக்ஷணம் யாது தேகாதிகள் நித்திரையடைந்தும் இந்திரியாதிகள் ஓய்ந்தும் அந்தக்கரணமில்லாமல் தன்னை அரியும் அதுதான் சீவன் முக்தியென்று சத்துக்கள் சொல்லுவார்கள்

இத்தை அனுபவிக்க தாபத்திரய அக்கினி உள்ளவனுக்கு அனுபந்த சதுஷ்டயம் கிடைத்து அதற்குமேல் சாதன சதுஷ்டய

சம்பந்நனாகி முதல்பூமி கிடைத்து, ஏழாம்பூமியேரி துரியமானால் துரியாதீதம் மோக்ஷம் புனராவ்ருத்தியில்லை

தாபத்திரய அக்கினியாவது சம்சாரத்தில் நின்றும் விடுபடல்

லெல்லாத்தையும் தள்ளலாம் இத்தை தள்ள மோக்ஷயிச்சையுள்ளவனாலே முடியும் மற்றவனாலே முடியாது இவனே அதிகாரி இவனுக்கு அனுபந்த சதுஷ்டயம் கிடைக்கும் அதாவது நாலு அதிகாரி விஷயம் சம்பந்தம் பிரயோசனம்,

அதிகாரியென்றால் என்ன?

மோக்ஷயிச்சையுண்டாகி குரு சாஸ்த்திரத்தை விடாமல் ஆத்மீக சாஸ்திரத்தை உணர்ந்தவன் யெவனோ அவனே அதிகாரி

விஷயமென்பது யாது

தத்துவத்தையடைந்து பிதரத்தை நீக்கினது தான் விஷயம்

சம்பந்தமாவது யாது

சர்வ சம்பந்தத்துக்கும் காரணமான துரியத்தில் விசிராந்தியடைய எப்போது ஞானாசாரியறையடைய வேண்டியது யென்பது சம்பந்தமாம்,

பிரயோசனம் யென்பது யாது மேல்குருவுக்கும் தனக்குஞ்சிரவணஞ்செய்து மஹாவாக்கியார்த்தத்தோடு துரியாதீதத்தையடைந்து துரியமாய் விளங்குகிறதுதான் பிரயோசனம்

இது பரம்பராசாதனமென்று சத்துக்கள் சொல்லுவார்கள்

அதற்குமேல் சாதன சதுஷ்டயம்
கிரமக்கிரமமாய் சொல்லப்பட்டிருக்கிறது

முன்னே சாஸ்த்திரம் சொல்லுகிறோம்
அதாவது சல்பவாதம் விதண்டாவாதம் வாதம்யென்று மூன்றுணடு அதில் சல்ப்பவாதமாவது நீ

வொன்று சொன்னால் நானென்று சொல்லுகிறது
முடிவு அடையாமல் யெழுந்திரிந்து போகிறது

### சல்ப்பவாதம்

விதண்டாவாதமாவது யாது பிடித்ததை சாதிக்கி
றது மதாபிமானிகள் செய்கை விதண்டாவாதம்

### வாதமாவது யாது

குருமுகமாய் சந்தேகம் தெளிவது யிது சத்து
க்கள் முறை வாதம்

### திரிபாத்து விபரம்

சேதுவிவதேசம் சம்பந்தவிவதேசம் பேத
விவதேசம் உன்மானவிவதேசம் நாலு. சேது
விவதேசமென்றால் என்ன கறை எப்போதும்போ
லயிருக்கிறது சமுத்திரம் வந்து வந்து போகின்றது
யென்றது சேதுவிவதேசம்

சம்பந்த விவதேசம் என்பது யாது?

யீஸ்வரனும் தானும்வொன்று சாயுச்சியாதிக
ளையடைந்து தானும் அதுவும் யேகமென்றது சம்ப
ந்தவிவதேசம்

பேதவிவகேதசமென்பது யாது?

ஙீஸ்வரன் பெரியவன் ஜீவன் சின்னவன் இவன் அவனை யடைகிறது என்றது பேதவிவகேதசம் இந்த மூன்றும் கூடாது

உன்மானவிவகேதசம் கூடும் அதாவது ஜீவன் பிர்மத்தில்லயமாகிறது நாம் அதுவென்றது கூடும். இத்தையடைய சப்தலெக்ஷணம் சொல்லுகிறோம்.

சப்தம் அர்த்தம் பதார்த்தம் பாவம் என்று நாலையும் அரிந்து சொல்லவேண்டியது வித்வான்களானபடியால் பாவத்தை யரிந்து சாஸ்திரம் சொல்லுகிறதுதான் சுவானுபவம்

கர்மபுரியட்டகமென்றால் யெது! வாக்காதி பஞ்சா சிரவணாதிபஞ்சா பிராணாதி பஞ்சா அகங்காராதி பஞ்சா புத்தி அவித்தை காமம் கர்மா ஆகயெட்டு ஆகையால் மோகம் உண்டாகிறதற்கு காரணம்

நேத்திரம் ஆதி ஆத்மீகம் ரூபம் ஆதி பௌதீகம், அதிஷ்டானம், பிரகாசம், சூரியன்

ஆதி தெய்வீகம் காமம் கர்மா ஜெகத்மோகம்

ஆதலால் நிஸ்த்திரிகுண்ணியனென்றால்:—
சமுசாரத்தில் நின்றும் விடுபட்டவன் இவன்தான்
பிரம்புரியட்டகத்தில் சார்வன் ஆபாசலெட்சணம்
சொல்லப்பட்டது பிரமஆபாசன் கூடஸ்தன் கூட
ஸ்த ஆபாசன் மனசு மனது ஆபாசன் அந்தக்
கரணம் அந்தக்கரணஆபாசன் பிராணன் பிரா
ணஆபாசன் ரெத்தம் ரெத்தஆபாசன் தேஹ
தேகத்தில் மினுமினுப்பினால் ரெத்தவிர்த்தி பெலத்
தினால் பிராணபெலம் பிராணனுக்கு வலு அந்த
க்கரணம் தைரியம் அந்தக்கரணம் விளங்கமனோ
திடம் மனதிநுடையபெலம் கூடஸ்தனுடைய அங்
கிகாரம் கூடஸ்தனுடைய அங்கிகாரம் கூடஸ்தனு
டைய விசாபகம் பிரம்மம் தானென்று உணராத
மோகம் இப்படியாக அன்னியோன்னிய ஆசிரயம்.

ஆகையால் சாஸ்த்திரபண்டிதன் அக்கியானி
ஏனென்றால் உபாசனை முக்கியமாகச்சொல்லி தசஉ
பநிஷத்தின் மார்க்கமே முக்கியமாகவும் சொல்லுகி
றதினால் மற்றஉபநிஷத்தில் சொல்லப்பட்ட தர்மம்

தள்ளிப் பேசுகிறபடியினுல் ராகத்து வேஷாதிகள் விடவில்லையென்று தெரிகிறது ஆனதால் ஈஸ்வர னுக்கு கோபம்பிறந்து சமன்வியப்படுத்தாததினு லே பிரம்ம ராக்ஷசுஜென்மம் கிடைக்கிறது இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

ஆத்தில் ஸ்நானம் செய்யப்போக சேறு பூசிக்கொள்வதுபோல ஆச்சுது பிரக்கினையென்ருல் பிரம்மமல்ல ஜீவன் என்று அர்த்தம் ஸ்திரியென்ருல் யெது? •வித்தை பிரகிருதி மாயை அவித்தை நாலு.

புருஷனென்ருல் எது?

ஜீவன் யீஸ்வரன் கூடஸ்தன் நிர்க்குணப்பிரமம் நாலு. இந்த ஸ்திரி புருஷ சய்யோகத்தினுல் பிரதிபாமாத்திர ரூபஸ்திரி சங்கல்ப்பசத்திகசித சித்ரூப யேவ மனசு என்று பேர்

இதனுல் ஜெகம் ஆச்சுது சந்திரசாகாந்நிய ஞாயம் எப்படியென்ருல் மாத்தின்யிடுக்கில் சந்திரனைப்பாரென்ருல் மாத்தையே பார்ப்பதுபோல நீ ஆத்மாவைப் பாரென்ருல் ஆத்மாவினிடத்தில் ஜெகம்

யில்லவேயில்லையென்று பார்ப்பதைவிட்டுவிட்டு சாஸ் திரத்தைப் பார்த்தால் ஆத்மா தெரியுமா தெரியாது

அதனால் சேதனுடனசானது அகங்காரம் புத்தி யோடு கூடி புரியட்டகம்

புரியட்டக சரீரமென்றால் அகங்காரம் புத்தி ம னாதிகளான யேகாதசேந்திரியம், புத்தியாதிகளா கிய தன்மாத்திரைகளும் சேதனமனகூடன்கூடி பிந் தப் பதினேழும் புரியட்டகம்

இதற்குச் சரீரமென்று பெயர்

ஒவ்வொரு தன் மாத்திரை வொவ்வொன்றினால் ஆறனும் கந்த தன்மாத்திரையான பூமி வில்வப்பளம் போல பூமி முதல் ஆகாசபரியந்தம் தொடர்ந்துபற்றி கடீபாகமடைந்து அசேதன மனதோடுங்கூடி சூட்சமத்தை யடைந்து அதற்குத்தான் புரியட்டக சரீரமென்று பெயர் மாயையென்ற சப்தத்துக்கு அர்த்தம்,

அவிர்வசநீயம்

அதாவது வசநிக்கக்கூடாது.

அவித்தையினுல்த்தான் எல்லா மோகமும் யீஸ்வராதி உற்பத்தியும் சீவசிருஷ்டியும் யெது கெடுதலோ அத்தைப் பார்த்துக் கொண்டேயிருச்கிறது அவித்தையே மூலகாரணி வித்தையானது கெடுதலை நீக்கி நலத்தில் சேர்ப்பிப்பது வித்தையென்று அர்த்தம் ஆனதால் சீவுன் முக்தனுக்கு துரியாதீதலெக்ஷண மெப்படி விளங்கவேண்டுமென்ருல் தியானம் சிரவணம் தியாகம் இந்த மூன்றும் விளங்கும்

பவம்யென்கிற சப்தத்திர்க்கு அர்த்தம் பரமேஸ்பரனென்று பெயர்

பாவா பாவமென்ருல் அர்த்தம் பாவமென்ருல் சாக்கிரசொர்ப்பனம்

அபாவமென்ருல் சுழுப்தி யிந்த இரண்டுக்கும் அதீதம் பிர்ம்மோகம்

மெய்யரியாப் பொய்யனுக்கு நாலுபிள்ளை யென்றது வொருவன் வாதி வயித்தியன் சோதிடன் மாந்திரீகன் நாலுபேர் இந்த நாலுபேருக்கும் அர்த்தம்.

வாதியென்ருல் சம்பாத்தியமுள்ளவன் வயித்தியனென்ருல் தேகத்தில் சோம்பலில்லை அவிழ்தம் சாப்பிடக்கூடினவன் சோதிடனென்ருல் இன்ன காலத்தில் செய்யலாம் தேசவர்த்தமானங்களை செய்யப்படாதென்று அரிந்து

வன் மாந்திரிகனென்றால் காலதேசவர்த்தமானங்களை யறிந்து அதற்கு அதிகாரியாய் செய்யக்கூடினவன்.

இப்படி அர்த்தமேயொழிய வேறில்லை

இனிமேல் லயகாலம் சொல்லப்படுகின்றது தேகவியோக காலத்தில்வாக்குமனசிலும் மனதுபிராணனிலும் பிராணன் சீவனிலும் சீவன் ததம்சமான பரமாத்மாவிலும் சேர்ப்பிவிக்கவேண்டும்

இதுதான் முக்கியமென்று சாதுக்கள் நடைமயித்திரியாதி குணத்தில் சாதாரண அரத்தம் மயித்திரியென்றால் சிநேகம் சாது சல்லாபம்.

கருணையென்றால் மிருகம் யேளைகளிடத்தில் வேலைவாங்கி சாப்பாடு புஷ்டியாய் கொடுக்கிறது.

முதிதையென்றால் சதாகாலமும் ஆத்மசந்தோஷத்தோடுங் கூடியிருக்கை

உபேக்ஷையென்றால் துஷ்டாளிடத்தில் காரியம் வரையில் சாவகாசம் போகத்தில் வெருப்பு ஆத்மாவில் விருப்புமாகயிருக்கிறது

கூட்டுரவு சொல்லப்படுகின்றது யென்னவென்றால் அவித்தையோடு கூடினவன் ஜீவன் மாயையோடு கூடினவன் யீஸ்வரன் பிரகிருதியோடு கூடினவன் கூடஸ்தன் வித்தையோடு கூடினவன் நிர்க்குணப்பிரமம் இதனால்தான் சீவன் நானாத்துவமாகினது ஆனதால் ஸ்திரி புருஷாள் யிந்த சய்யோகத்தினால் உண்டானார்கள்

இதற்குத் திருஷ்டாந்திரம் சமுத்திரமே துரியாதீதம் அலேயே துரியம் நுறையே மாயை அவித்தை திவலேயே சீவகோடிகளெல்லாம் பிர்மத்தைத்தவிர வேறில்லே.

இயர்க்கைகுணம் சோதித்துயென்றால் சாஸ்திரக்கியானம்விட்டு அனுபவத்தில் கண்டபடி சோதித்துக்கொண்டு வந்ததுதான் சிஷ்யன் பூவில் மணம்போல யென்றால் சித்து உலகத்தில் வாசனை அந்த வாசனையில் விளங்கும் உண்டானபிறகு வாசனையில்லாதுபோல ஜெகத்தை உண்டாக்கினபிறகு சித்துயில்லே சூரியன் உண்டாகி நாளில்லே சீவனுக்கு அக்கியானம் தானே யொழியவேறில்லே

ஆனதால் சூரியனிடத்தில் இருளில்லை அது போல அந்தக்காணத்தை பார்த்தால் பிரகாசம் பா றுவிட்டால் புரம்பில் யிருள்

அந்தக்காணமே பாமேஸ்பர சுபாவம்.

சூரியன்டால் கண்ணுடியில்ப்பட்டு எதுத்து தானும் சூரியனைப்போல சிலசமயம் பிரகாசிப்பது போல அந்தக்காணமும் பிரகாசமானுல் ஜெகத்தோ ற்றுரவுயில்லை சமுத்திரஜலம் உப்பாச்சுது எனெ ன்றுல் வரைக்குள் கட்டுப்பட்டு பூபரிசமானபடியா ல் உப்பு சீவகோடிகள் அனுபவிக்க ஆச்சுது சமு த்திரத்தை தவிர வேறும்யில்லை சமுத்திரம் ஆகவு மில்லை இந்த உப்பு சலத்தைத் தவிர வேரில்லை இந்த உப்பு ஜலத்தில்ச் சேர்ந்தால் தன் மயமாவதுபோல ஜீவன் தேகோசா அதிஷ்டான தேவதையைச்சேர்ந்தா ல் ஜீவன் சிவன் சுளிகேடில்லை அதவா பாதேவ தைகிருபையில்லாமல் ஜீவன்சிவமாகிறது கிடையாது கூடஸ்தனென்றுல் வம்சத்துக்கு தலைவன் யென்று அர்த்தம் கூடஸ்தன் தகப்பன் ஜீவன் பிள்ளை பாட்டன் பிரமம் யெல்லாரும் பாட்டனையடைய வேண்டியது சுருதிப்பிரமாணம்

பிரபோதச் சந்திரோதயம் கூடஸ்தனென்றால் மனசு அது மாயை அதன்பிள்ளை பிரவிர்த்தி, நிவர்த்தியென்று யிரண்டுபேர் நிவர்த்தியானவன் தகப்பன் பேச்சைக்கேட்டு பாட்டன் விலங்கை வெட்டி ஆநந்தத்தை அடைந்தான், பிரவிர்த்தி தாய்பேச்சைக் கேட்டு ஜெகதாதிகளை யடைந்து சரா மரண துக்கத்தை அடைந்தான் தாய் சொற்றவரினால் வாசகமில்லை யென்றதற்கு அர்த்தம்

விவேகன் காமாதிகளுக்குச் சொன்னான் என்னவென்றால், தாய் அரசு துளசி பெரியவாள் வில்வம் யிவர்களைக் கண்டால் நமஸ்காரம் செய்யலாமென்று சாஸ்திரம் சொல்கிறதேயொழிய வேறில்லை அவாள் புத்தியைக்கேளென்று சொல்லவில்லை ஸ்திரிபுத்தி விபரீதம்யென்று வேதம் சொல்லுகிறது பூமியில் சத்தையே யொழிய வித்தில்லை.

தன்னிடத்திலும் சத்தையேயொழிய வெளியிலில்லை பிரமத்தில் போய் அயிக்கியமாகிறதேயொழிய அத்தை அறிகிறதில்லை உப்பு சமுத்திரத்தில் போகிறதேயொழிய சமுத்திரத்தை அறிகிறதில்லை

தான் சிதாகாசமிருக்கிறதே யொளிய அதனை அறிகிர தில்லை பராசக்தி கிருபை யென்றால்

## திஷ்டாந்தம்

ஆகாயத்தில் உப்பு தட்டினால் தானே உப்பு கசியும் தன்மயமாவதுபோல ததாகாரம் சமுத்திர த்தைப் போய்ச்சேரவேண்டும் விதேகம் ஆனால்தா ன் பவம் விடுமென்றான் விவேகன் காமன் அரிந்து கொண்டான்

## மூன்று சக்திகளென்ன

இச்சை கிரிகை ஞானம் இதற்கு காலம் தேசம் வர்த்தமானம் யிதில் தேசசக்தி நாநாவித மாய்த் தோற்றும் காலசக்தி கிரமப்படி நடத்தும் கர்மசக்தி தொழில்செய்யும் இந்த மூன்று சக்தி யோடு சிற்சக்தி விளையாட நாநாசக்திகளைக்கூட்டி க்கொண்டு உல்லாசம் பண்ணுகிராளென்று தேவிபா கவதம் சொல்லுகிறது கோசகாரக்கிருமியைப்போல தன்னையே கெடுக்கும் இந்த மனம் இதற்கு சதாஉ ல்லாசமே சொரூபம் சிங்கம் கூண்டிலகப்பட்டது போலும் யானை சேத்தில் அழுந்தினதுபோலும்

அசகரம் மலைபாம்பு யிருந்தயிடத்தில் ஜீவனை முழுங்குவது போலும்

பாட்டனுகிய பிரமத்தை அடையாவிட்டால் நரராக்ஷசன்

இந்திரியஸ்திரியை விட்டு விட்டு ஆத்மகியானத்தில் இருப்பாய் இதற்கு விடாதே பிடிக்காதேயென்று சொன்னது அர்த்தம் சம்சாரத்தை விடாதே சந்நியாசத்தை பிடிக்காதே இந்தப்படியிருக்க ஆனந்தத்தை அடைவாய் ஆனதால் தேகசுத்தியென்றால் ஸ்நானம் திரவியசுத்தியென்றால் தர்மம் பூதசுத்தியென்றால் சீவசிவனை பரமசிவனிடத்தில் சேர்ப்பிவிக்கிறது

பூசுத்தியென்றால் குருகுலவாசம்செய்கிறது, எட்டு சித்தர் வாக்கியம் முதல்சித்தர் சொல்வது திருஷ்டாதெரிசனமத்தியில் கியானம் அனுபவிக்கிறேனென்றார் சோதிக்கியானம் திருஷ்டா தெரிசனக்கியானம் பிரத்தியேகாத்மா மத்தியில் சம்வித்கியானம் அனுபிவிக்கிறேனென்றார் இரண்டாவது சித்தர் திரிபுடியும் அர்த்தக்கியானத்தில் தெரிசனத்

தில் தீ புத்தி விருத்தியில்லாத தியானம் எதுவோ அது நானென்றார்

மூனுவது சித்தர் சத்தான கூடஸ்தன் விளங்குகிறான் அசத்தானதேகாதிகள் விளங்குது இரண்டுக்கு ம்த்தியில் சேதநம் சித்தாகயிருக்கிறது பாமேஸ்பான் பாமேஸ்பரி இரண்டுக்கும் எந்த ஸ்புரணம் வொரு பாதேவதை சொடுத்துதோ அதுதான் நானென்பார்

நாலாவதுசித்தர் உத்யானவநத்தில் யிவாள் பேச ஞானசனகாசன் கேட்டு ஜீவன் முக்தனானர்.

அகார உகார மகார அர்த்தமாத்திரை அமாத்திரையாயும் இருக்கிறது அகாரம் குண்டலியிநிடத்தில் நின்று வருகுது அக்கினி உகாரம் கண்டத்தில் நின்றும் சூரியன்மகாரம் பிரடியில் நின்றும் சந்திரநாய் புருவமத்தியில்நின்றும் மிந்நல்க்கொடிபோலதோன்றும் அகாரம் வருகிற மூச்சு உகாரம் போகிற மூச்சு மகாரம் அரிகிறது அர்த்தமாத்திரை சாக்ஷி துரியம் அமாத்திரை துரியாதீதம் மவுனம் இது நானெனறார் ஐந்தாவது சித்தர்

குகாசயனன் யெவனே அவனே கூடஸ்தன் அந்தக்கரணத்தோடுங் கூடினவன் அதற்கு விலக்ஷனன் பிரத்தியேகாத்மா அவனே நானென்றார் ஆறுவது சித்தர்

இந்திரியத்துக்கு அதிஷ்டானமாயிருக்கிற அந்தக்கரணம் நானென்றது ஜீவன் விடுபட்டது எதுவோ. அது ஆத்மானேனென்றார் ஏழாவது சித்தர்.

எல்லாம் தானுயிருக்க தன்னைத்தவிர ஜெகமில்லை தானே போதரூபம் யீஸ்வரனென்றார் எட்டாவது சித்தர்

சாந்தமென்றார் எது இந்திரிய நிக்கிரகம் அதுசெல்ல தான் உபசாந்தனுயிருப்பதே மோக்ஷம்

இத்தன்மையாகயிருக்க சாதுக்கள் நடை யிரும்புக்கு அடியேயொளிய அக்கினிக்கி அடியில்லை.

அதுபோல சிதாபாசாந்த ஜீவனுக்கு அடியேயொழிய ஆத்மாவுக்கு அடியில்லையென்று சத்துக்களாகிய சாதுக்கள் நடையென்று பெரியோர்களாகிய வித்வான்கள் சொல்லுகிறார்கள்

தேசோ அதிஷ்டானதேவதை சித்து அது தேகத்தில் ஆத்மா அத்தைக்காப்பாத்தும்பொருட்டு நூறு காரியத்தை விட்டுப்போட்டு போஜனகாலத்தில் போஜனம் செய்யவேணும்

ஆயிரம் காரியத்தைவிட்டுப் போட்டு காலாகாலத்தில் வர்ணாச்சிரம தர்மப்படி ஸ்கான, பானம் ஜெபம் தியானம் பூசை முதலானதும் செய்யவேணும்

பதினாயிரம் வேலையை விட்டுப்போட்டு குருகுலவாசம் சிரவணாதிகள் செய்யவேண்டும் லெட்சம் வேலையை விட்டுப்போட்டு கேட்டபோது தியாகம் செய்யவேண்டும் கோடிவேலையை விட்டுப்போட்டு ஆத்மாவை சதாகாலமும் நினைக்கவேண்டும் இந்தப் படியாக சாதுசர்ச்சன சங்கத்தை விடாமல் லேவிபயிரைக் காப்பாத்துவதுபோல அந்தப் புண்ணியத்தினாலேயும் ஸ்ரீ சத்குரு கிருபாவீக்ஷண்ணிய புண்ணியபலத்தினாலேயும் ஸ்ரீ பரதேவதையாகிய ஸ்ரீ காமாக்ஷி உபாசனை பெலத்தினாலேயும் யிந்த சிஸ்டாசாரமென்னும் சதபுருஷக்கிரமம் நிறைவேறிற்று

சம்பூர்த்தி சத்குருதுணை சுபமஸ்து சுபம்.